2006 ஆகஸ்ட் 25]

முற்பகல் 10–00

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாலே ஒரு பொதுத் திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, நிதியை மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசினுடைய நிதி வந்தவுடனே நிச்சயமாக ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுகின்ற பணி தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் அமர்வு நீதிமன்றம் துவங்குவது குறித்து அமைச்சர் அவர்கள் வருகின்ற ஆண்டில் ஆலோசிக்கப்படும் என்ற பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். தருமபுரி என்பது மாவட்டத்தினுடைய தலைநகரம். மாவட்டத் தலைநகரில் இருக்க வேண்டிய அமர்வு நீதிமன்றம் கடந்த காலங்களில் மாவட்டம் பிரிக்கப்படாத சூழ்நிலையிலும்கூட கிருஷ்ணகிரியிலே இயங்கி வந்தது. அன்றைய காலக்கட்டத்திலிருந்து தொடர்ந்து போராடி வருகிற வழக்கறிஞர்கள், அரசியல் கட்சிகள் எல்லாம் இருந்தாலும், அதையெல்லாம் ஏற்றுக்கொண்டு, மாவட்டத் தலைநகரில் இருக்க வேண்டிய அமர்வு நீதிமன்றம் இல்லாதது, பெரும் குறையாக இருக்கின்ற காரணத்தால், அந்தக் குறையைப் போக்குகின்ற வகையில், அந்த மாவட்டத்திற்கும் நீதி கிடைக்கிற வகையில், நீதிமன்றம் நடப்பாண்டிலே தொடங்குவதற்கு, அரசு முன்வர வேண்டும் என்பதை வலியுறுத்தி, அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை வருகிற ஆண்டிலே நிச்சயம் நிவர்த்தி செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 98, திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

98—

மாவட்ட விளையாட்டு அலுவலகம்

***490—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 25

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு மாவட்ட விளையாட்டு அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாவட்ட விளையாட்டு அலுவலகம் அமைத்துத் தர ஆவன செய்யப்பட்டுள்ளது. (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் மாவட்ட விளையாட்டு வளாகம் அமைக்க அரசால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட விளையாட்டு வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்ட விளையாட்டு வளாகத்தில் உள், வெளி விளையாட்டு அரங்கில், 400 மீட்டர் தடகள ஓடு பாதை, கால்பந்து மைதானம், கூடைப் பந்து மைதானம் மற்றும் கையுந்துப் பந்து மைதானம் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கூட்ட அறை, உடற்பயிற்சிக் கூடம், ஆண்கள், பெண்களுக்கான கழிவறைகள் மற்றும் ஓர் அலுவலக அறையும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், இரண்டு செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளமும் மற்றும் குத்துச் சண்டை மேடையும் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்ட விளையாட்டு அலுவலகம் 10–2–2006 முதல் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன்.

திரு. டி. செங்குட்டுவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் தனியாகப் பிரிக்கப்பட்டு, 9–2–2004–லே அரசாணை பிறப்பிக்கப்பட்டு, தனியாகப் பிரிக்கப்பட்டது. பிரிக்கப்பட்டபின், இன்றுவரையிலே இன்னும் பல்வேறு மாவட்ட அலுவலகங்கள், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வர வேண்டிய மாவட்ட அலுவலகங்கள் இன்னும் தருமபுரியிலேயே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதனால், கர்நாடக மாநில எல்லையை ஒட்டியுள்ள பொதுமக்களும், ஆந்திர மாநில எல்லையை ஒட்டியுள்ள பொதுமக்களும் நான்கு மணி நேரம், ஐந்து மணி நேரம் பயணம் செய்துதான் அந்த மாவட்ட அலுவலகங்களிலே உள்ள பணிகளைக் கவனிக்க முடிகிறது. அதிலே ஒன்று, நம்முடைய விளையாட்டு—Sports அலுவலகம். ஆகவே, இந்த அலுவலகத்தை தருமபுரி மாவட்டத்திலிருந்து தனியாகப் பிரித்து,

2006 ஆகஸ்ட் 25]

கிருஷ்ணகிரி மாவட்டத்திலே அமைக்க அமைச்சர் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து பேசி மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், தருமபுரி நகரிலே அமைந்துள்ள விளையாட்டு மைதானம் ஆறு சுற்றுகளைக் கொண்ட மைதானமாக இருப்பதால் மாநில அளவிலான, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை அங்கே நடத்த முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே, மாநில அளவிலான, தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்த எட்டு சுற்றுகள் கொண்ட மைதானமாக அமைக்க அரசு முன் வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியில் மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த யோசனையை ஏற்கெனவே தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு விளையாட்டு ஆணையத்தின் மூலமாக, எல்லா மாவட்டங்களிலும் உள் விளையாட்டு அரங்கம், வெளி விளையாட்டு அரங்கம், நீச்சல் குளம் போன்றவை அமைப்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கிறது. இதுபோக, மற்றுமுள்ள பிரச்சினைகளும், உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கையும் ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால்.

திரு. எஸ். ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குகின்ற

வகையில், பஞ்சாயத்துக்கள் அளவிலே விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலேயுள்ள இளைஞர்களும் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், உள்ள ஆரோக்கியத்தோடும் வாழ்வதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்கள் அளவில் போட்டிகளை நடத்தி, அதற்கான பரிசுகளை வழங்குவதற்கு, பெரிய அளவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்காக இந்த அரசு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்கும்போது, அவர் மல்யுத்த வீரராக இருந்திருப்பார் என்று நினைக்கின்றேன். வேறு ஏதாவது அவருடைய இள வயதில்—அவர் திருநெல்வேலி மாவட்டத்துக்காரராக இருப்பதனால், உறுதியாக மல்யுத்த வீரராக இருப்பார்—வேறு ஏதாவது விளையாட்டில் சிறப்புத் தகுதியைப் பெற்றிருக்கிறாரா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர் ரொம்ப நல்லவர். வேறு விளையாட்டுக்களில் ஈடுபடமாட்டார். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

99—

புலிகள் இனம்

***86—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—